28.03.2025
OS. No.117/2021
**பி.வா.சா.1 –** திரு.மனோகர் த/பெ. கணேசன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (வாதி தரப்பில்) :–**

என் தாத்தாவின் பூர்வீகம் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. ஆனால் என் தாத்தா காலத்தில் நாமக்கல் மாவட்டம், பாலப்பட்டிக்கு சென்றார்கள். பாலப்பட்டி என்பது என் தாத்தாவின் மாமனார் ஊர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த ஊரில் என் தாத்தாவிற்கு நிலமோ, வீடோ இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா ஓய்வு பெற்ற காவலராக இருந்தாரா என்றால் அவரைப் பற்றிய எந்த ஒரு விபரமும் எனக்குத் தெரியாது. திருச்சிராப்பள்ளியில் உள்ள ராணி தெரு தான் என் தாத்தாவின் பூர்வீகம் என்றும், அவரது சகோதரர்களால் அவர் ஏமாற்றப்பட்ட காரணத்தினால் பாலப்பட்டிக்கு அவரது மாமனார் வீட்டுக்கு சென்றார் என்றும், காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று அவரும் துணி வியாபாரம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் என் தகப்பனார் அவரது சகோதரர்களுடன் சேர்ந்து திருச்சியில் துணி வியாபாரம் செய்தார் என்றால் இல்லை. என் தகப்பனாரின் சகோதரர்களின் பெயர் சுப்பிரமணி மற்றும் ராமலிங்கம் ஆகும். என் தகப்பனார் தான் திருச்சிக்கு வந்தார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் தகப்பனார் காலம் சென்ற காரணத்தினால் அவரது தாயாருடன் திருச்சிக்கு வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் முதன் முதலாக திருச்சிக்கு வந்த போது குப்பாங்குளம் வந்து வசித்தார்கள். என் தகப்பனாரின் சகோதரர்கள் அவர்களின் திருமணத்திற்கு பிறகு தனித்தனியாக பிரிந்து சென்றார்கள். ஆனால் அவர்களின் திருமணம் எந்த வருடம் நடைபெற்றது

என்று எனக்கு தெரியாது. எனக்கு விவரம் தெரிய அவர்களின் திருமணம் நடைபெற்றது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் சகோதரர்கள் திருச்சியில் தான் இருந்தார்கள். என் தகப்பனாரின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள் அனைவரும் என் தகப்பனாருடன் நல்ல உறவு நிலையில் தான் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். எனக்கு அவர்களுடன் எந்தவித பகையும் கிடையாது. எனது இளைய சகோதரியின் மகளின் சடங்கு வைபவம் தான் என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போது நடைபெற்ற கடைசி நிகழ்ச்சி ஆகும். என் சகோதரிகள் வீட்டு சுப காரியங்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் கலந்து கொண்டது கிடையாது என்றால் சரியல்ல. என் சகோதரர்கள் இரண்டு பேரும் தான் என் சகோதரிகள் வீட்டு சுப காரியங்களில் கலந்து கொள்வார்கள் என்றால் நானும் கலந்து கொண்டிருக்கிறேன். எனது வீட்டில் நடைபெற்ற சுப காரியங்களுக்கு என் சகோதரிகள் வந்து கலந்து கொண்டு இருந்திருக்கிறார்கள். என் தகப்பனார் உடல் நலம் பாதிக்கப்பட்டு மயக்கம் அடைந்த பிறகு மருத்துவ சிகிச்சை செய்தபோது இருதயம் பாதிப்பு அடைந்து இருப்பதாகவும் பேஸ்மேக்கர் வைக்க வேண்டும் என்று சொன்ன காரணத்தினால் தான் வைக்கப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு சர்க்கரை வியாதி இருந்தது. என் தகப்பனார் தன்னுடைய இதய நோய்க்கு டாக்டர் செந்தில் என்பவரிடமும் சர்க்கரை வியாதிக்கு டாக்டர் பிரபு குமார் என்பவரிடமும் சிகிச்சை எடுத்து வந்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு மருத்துவர்களும் ராணா மருத்துவமனையில் தான் இருக்கிறார்கள். என் தகப்பனார் இறப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றால் அன்றைய தினம் மாலையில் அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இரவில் உயிர் பிரிந்து விட்டது. என் தகப்பனார் தன்னுடைய இருதய நோய் தொடர்பாக 6 மாதங்களுக்கு ஒரு

முறை பரிசோதனை மேற்கொள்வார். அவரது நீரழிவு நோய் தொடர்பாக ரத்தப் பரிசோதனை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எடுத்துக் கொள்வார். கடந்த 2007 ஆம் வருடம் என் தகப்பனாருக்கு 70 வயது நடைபெற்றது. அப்போது என் தகப்பனாருக்கு இரண்டு துணிக்கடைகள் இருந்தது. என் தகப்பனார் என்னுடன் தான் இருந்தார். எனது வீடு அண்ணா நகரில் அமைந்து இருக்கிறது. என் அம்மா 2009 ஆம் வருடம் இறந்தார். 2007 ஆம் வருடத்திற்கு பிறகு என் தகப்பனார் என் சகோதரிகள் வீடுகளில் நடைபெற்ற எந்த ஒரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என் தகப்பனாரின் மருத்துவ அறிக்கைகள் என் வசம் இருக்கிறது. 2017 ஆம் வருடம் என் இளைய சகோதரியின் மகள் சடங்கிற்கு என் தகப்பனார் என்ன செய்தார் யார் மூலமாக செய்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் தன்னுடைய பேத்திக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்தார் என்பது எனக்கு தெரியும். என் தகப்பன் வழி பாட்டி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்குத் தெரியாது. என் அம்மா வழி பாட்டி குளித்தலையை சேர்ந்தவர் ஆவார். அவரது அப்பா ஒரு வக்கீல் குமாஸ்தா என்றால் சரிதான். அவர்களது வீட்டிற்கு நான் சென்று இருக்கிறேன். ஆனால் அந்த வீடு எந்தப் பகுதியில் இருந்திருக்கிறது என்று தெரியவில்லை. என் அம்மாவுடன் பிறந்தவர்கள் ஐந்து பேர்கள் ஆவார்கள். முருகானந்தம், சாந்தா, உஷா, அப்பர் மற்றும் ஒருவர் ஆவார்கள். என் அம்மாவிற்கு அவரது வீட்டில் இருந்து எத்தனை பவுன் நகை அணிவித்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. என் அம்மா அதற்கு தனியாக ஆவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. என் தகப்பனார் நடத்தி வந்த வியாபாரம் எந்த வருடம் முடிந்தது என்றால் தற்போது வரை நடத்திக் கொண்டு இருக்கிறோம். அந்த வியாபாரத்திற்கு ஜி.எஸ்.டி. மற்றும் வருமான வரி செலுத்துகிறோம். 2007 ஆம் வருடத்தில் இருந்து 2021 ஆம் வருடம் வரை ஜி.எஸ்.டி. மற்றும் வருமான வரி

விதிப்பு என் தகப்பனார் பெயரில் இருந்து வந்தது. தற்போது ஜி.எஸ்.டி. மற்றும் வருமான வரி விதிப்பு எனது பெயரில் இருக்கிறது. என் தகப்பனாருக்கு திருச்சிராப்பள்ளியில் உறவினர்கள் இருக்கிறார்கள். நண்பர்கள் கிடையாது. என் தகப்பனார் இறக்கும் வரை நான் தற்போது குடியிருந்து வரக்கூடிய அண்ணா நகர் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரிதான். அந்த வீட்டின் மாடியில் எனது இரண்டாவது சகோதரர் இருந்தார். தற்சமயம் அவர் தனியாக இருக்கிறார். எனக்கு விவாகரத்து ஏற்பட்டு அது தொடர்பாக ஒரு வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் எனது மனைவி என்னிடம் வாழ்க்கை பொருள் உதவி எதுவும் கேட்கவில்லை. நானும், எனது மனைவிக்கு ஜீவனாம்சம் எதுவும் கொடுக்கவில்லை. என் தாயார் இறந்த பிறகு என் தகப்பனார் என் தாயார் பெயரில் உள்ள சொத்தைப் பொறுத்து எங்கள் அனைவரிடமும் விடுதலை பத்திரம் கேட்டு வாங்கினார் என்றால் சரிதான். அதில் இன்ன காரணத்திற்காக என்று தனிப்பட்ட முறையில் எதுவும் சொல்லப்படவில்லை. அந்த சொத்துக்கள் அனைத்தும் அந்த விடுதலை பத்திரங்களுக்கு பிறகு தான் என் அப்பா பெயருக்கு முழுமையாக மாறியது. அந்த சொத்தானது என் தாயார் இறக்கும் வரை அவருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தாக இருந்தது என்றால் சரிதான். தகப்பனாருக்கு 1990 ஆம் வருடத்தில் இருந்து வருமான வரி கணக்கு இருக்கிறது. அதற்கு முன்பு என் தகப்பனார் வருமான வரி கணக்கு வைத்திருந்தாரா என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் செய்த முதலீடு மற்றும் அவரால் வாங்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கணக்கு வழக்குகள் இருக்கிறது. அந்த கணக்கு வழக்குகள் என் அப்பா வசம் தான் இருந்தது. அவைகளை பார்வையிட்டால் என் தகப்பனாருடைய வியாபார மூலதனம் எங்கிருந்து வந்தது என்பது தெரியவரும் என்றால் அது என் அப்பா வசம் தான் இருந்தது. எனக்கு தெரியாது. நான் தற்போது வழக்கிற்காக உண்மை தெரிந்து

விடும் என்பதால் எனக்குத் தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு வழக்கு வியாஜியம் எதுவும் கிடையாது. வரி தொடர்பாகவும் வழக்கு வியாஜியம் எதுவும் கிடையாது. உயில் சாசனமானது எங்கு இருந்து எடுக்கப்பட்டது என்றால் பிரோவில் வைத்திருந்தார். நீலமேகம் மகன் ராமகிருஷ்ணனின் விலாசம் எனக்கு தெரியாது. ராமலிங்கம் மகன் முத்து கருப்பன் என்பவரை எனக்கு தெரியும். ஆனால் அவரது விலாசம் எனக்கு தெரியாது. முத்துக்கருப்பனை எனக்கு ஐந்து, ஆறு வருடங்களாக தெரியும். என் அப்பா இறப்பதற்கு ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பாக தெரியும். அவர் ஆட்டோ ஓட்டுகிறார். ராமகிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும். ராமகிருஷ்ணன் எங்கள் கடையில் வேலை பார்த்த காலத்தில் இருந்து அவரை எனக்கு தெரியும். அவர் மூன்று வருட காலம் எங்கள் கடையில் வேலை பார்த்தார். முத்துக்கருப்பன் என் குழந்தைகளை பள்ளிக்கு ஆட்டோவில் அழைத்துச் செல்லும் நபர் என்றால் இல்லை. என் அப்பாவை தான் அவர் கடைக்கு அழைத்துச் செல்வார். முத்துக்கருப்பனுக்கும் என் அப்பாவிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. ராமகிருஷ்ணன் எங்கள் கடையில் என்னால் வேலைக்கு அமர்த்தப்பட்டவர் என்றால் இல்லை. அவர் என் அப்பாவால் வேலைக்கு அமர்த்தப்பட்டார். 2007 ஆம் வருடம் என் தகப்பனாருக்கு பேஸ்மேக்கர் வைக்கப்பட்ட பிறகு கடையின் முழு பொறுப்பையும் நான் வாங்கிக் கொண்டேன் என்றால் இல்லை. எனது இதர சகோதர, சகோதரிகளுக்கு 2007 ஆம் வருடத்திற்கு பிறகு வியாபாரம் சம்பந்தமான விபரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2007 ஆம் வருடத்திற்கு பிறகு கடைக்கு தினசரி வந்து வியாபாரத்தை நேரடியாக கவனித்தார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. என் தகப்பனார் வங்கியில் வைப்பீடுகள் வைத்திருந்தார் என்றால் இல்லை. என் தகப்பனார்

கடையின் வியாபார கணக்குகளை லட்சுமி விலாஸ் வங்கியில் வைத்திருந்தார். அந்த வங்கியில் வைப்பீடு இல்லை. அந்த வங்கியில் வைப்பீடு இருந்து எடுக்கப்பட்டதா என்றால் எப்போதுமே இல்லை. என் தகப்பனாருக்கு அவரது வங்கிக் கணக்கு லட்சுமி விலாஸ் வங்கியில் இருக்கிறது என்ற விவரம் தெரியும். அந்த வங்கிக்கு என் தகப்பனார் சார்பாக நான் தான் செல்வேன் என்றால் இல்லை. என் தகப்பனார் தான் செல்வார். வங்கியில் உள்ள அதிகாரிகளை விசாரித்தால் அந்த ஆவணங்கள் யார் பெயரில் இருக்கிறது என்பது தெரியும். நான் தினமும் காலை 8.45 மணிக்கு கடைக்கு செல்வேன். நான் வியாபாரம் செய்த கடை பெரிய கடை வீதியில் உள்ளது. 2007 ஆம் வருடத்திற்கு பிறகு அந்த கடைக்கு நான் மட்டும்தான் செல்ல வேண்டும் என்றும், வேறு யாரும் அந்த கடைக்கு வரக்கூடாது என்று என் தகப்பனாரிடம் நிர்ப்பந்தப்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் தாயார் இறப்பிற்குப் பிறகு என் தகப்பனார் முழுக்க முழுக்க எனது கட்டுப்பாட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. 2015 ஆம் வருடம் ஏற்பட்டதாக சொல்லப்படும் உயில் சாசனமும், 2016 ஆம் வருடம் ஏற்பட்டதாக சொல்லப்படும் உயில் சாசனமும் எனது தூண்டுதலின் பேரில் நான் தயார் செய்த ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் என் தகப்பனாரின் விருப்பம் என்பது கொஞ்சம் கூட கிடையாது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு தன் மகள்களை ஒதுக்கி வைத்துவிட்டு சாசனம் எழுதி வைக்க வேண்டிய அவசியமோ, சூழ்நிலையோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் கடுமையான உடல் நல பாதிப்பை பயன்படுத்திக் கொண்டு நான் உயில் சாசனங்களை உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. உயில் சாசனம் தான் எழுதப்படுகிறது என்ற நினைவு கூட என் தகப்பனாருக்கு இறந்தது கிடையாது என்றால் சரியல்ல. உயில் சாசனம் எழுதும்போது யார் இருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. என் தகப்பனார் எந்த கம்ப்யூட்டர்

சென்டருக்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் 2007 ஆம் வருடத்திற்கு பிறகு வீட்டை விட்டு அதிகம் வெளியே சென்றது கிடையாது என்றால் சரியல்ல. அவர் அடிக்கடி வெளியே செல்வார். என் வீட்டில் உள்ள எனது இரண்டாவது மனைவிக்கு தெரியாமல் என் தகப்பனார் எங்கும் செல்ல மாட்டார் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் என் தகப்பனாருக்கு என்று தனியாக எதுவும் கிடையாது என்றும், அவர் எங்களுடன் சேர்ந்து தான் இருந்தார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் நாங்கள் மொத்தம் நான்கு நபர்கள் ஆவோம். 2007 ஆம் வருடம் என் குழந்தைகள் என்ன செய்து கொண்டு இருந்தார்கள் என்றால் அப்போது எனக்கு குழந்தை பிறக்கவில்லை. எனக்கு 2017 ஆம் வருடம் தான் குழந்தை பிறந்தது. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் என் கைவசம் தான் இருந்தது என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த நான்கு நாட்களில் என் சகோதரிகள் பாகப்பிரிவினை கேட்டார்கள். பாகப்பிரிவினை தொடர்பாக பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. என் சகோதரிகள் யாரும் என் தகப்பனாருக்கு அருகில் திருச்சியில் வசிக்கவில்லை என்றால் சரிதான். என் சகோதரிகளை என் தாயார் மரணத்திற்கு பிறகு வீட்டிற்குள் நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் நாங்கள் பொறுப்பின்றி செயல்பட்டு வந்த காரணத்தினால், எங்களுக்கு சொத்தை முழுமையாக எழுதி வைக்க வேண்டிய மனநிலையில் இல்லை என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் வீட்டில் இருந்த பீரோவில் இருந்தது. அதில் மூன்று பத்திரங்கள் இருந்தது. மூலப்பத்திரம் எதுவும் கிடையாது. அண்ணா நகரில் உள்ள வீடு 1992 ஆம் வருடம் கிரையம் பெறப்பட்டது. இருக்கும் வீடுகளில் அதுதான் அதிக மதிப்பு உடையது என்றால் சரிதான். என் சகோதரிகளுக்கு என் தகப்பனார் என்ன செய்தார் என்பது தொடர்பாக எதுவும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. கடந்த 2015 ஆம் வருடத்திலும் 2016

ஆம் வருடத்திலும் என் தகப்பனார் சாசனங்கள் எழுதி வைக்க கூடிய அளவில் உடல்நிலை மற்றும் மனநிலையில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் உடல்நிலையையும் அவர் தன் மனைவியை இழந்து தனிமையில் இருந்த சூழ்நிலையை பயன்படுத்தி நான் ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து இருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உயில் ஆவணத்தில் குறிப்பிட்டு இருக்கக்கூடிய சாட்சிகள் இரண்டு நபர்களும் எனக்கு வேண்டிய நபர்கள் என்றும் அவர்கள் இருவரும் என் தகப்பனாருக்கு வேண்டிய நபர்கள் கிடையாது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் நம்பிக்கைக்கு உரிய உறவினர்கள் இருக்கும் நிலையில் சம்பந்தம் இல்லாத நபர்களை உயில் ஆவணத்தில் சாட்சிகளாக போட வேண்டிய அவசியம் கிடையாது என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டிருக்கக்கூடிய பாகப்பிரிவினை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்க கூடியதாக இருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் ஏற்புடைய ஆவணம் கிடையாது என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/-xxx,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.